Regd No. M

விலை அணா 1

முரசொலி

தமிழ் வாரவெளியீடு.....

ஆசிரியர் மு. கருணாநிதி.

ரியார் ஆண்டு 69, மாசி 13. (25-2-48) புதன்கிழமை [ஒலி 7

சொர்க்க லோகம், சூரியன் மறையும் நேரம் சுந்தரமான பூஞ்சோலை. சோலையின் ஒரு மூலையில் சொந்த விஷயங்கள் பேசிக்கொண்டிருந்த சில தேவர்கள், சுற்றிச் சுற்றிப் பூப்பறித்து சுழல் வண்டுகளென ஆடிவந்த அரம்பையர்கள், அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் ஒய்யாரம்; ரம்பையின் நவரத்தின மாலையைப் பார்த்து மேனகை, இது எதடி? என்று கேட்க... இது இந்திரன் தந்தது என......'ஓஹோ கட்டிலறைப் பரிசோ' என்று மற்றவர்கள் கேலி செய்ய...அப்படியே ஒவ்வொருவரும் தங்கள் அணிகளை ...இது சந்திரன் சன்மானம், இது சூரியன் பரிசு, இது மன்மதனின் வெகுமானம் என அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தனர். சந்திரனும் தாரையும் அஸ்வதி நட்சத்திரத்தை எடுத்து பூப்பந்து ஆடிக்கொண்டிருந்தார்கள். ஒரு பகுதியில்! பூலோகத்தையே உருட்டி அக்கினி பகவான் வாயு முதலியவர்கள் கால்பந்து விளையாட்டில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். பார்வதி தேவி பரமசிவனின் தோளிலே கிடந்த பாம்பையெடுத்து (ஸ்கிப்பிங் ரோப்) குதிகயிறு ஆடிக்கொண்டிருந்தாள். பிர்மாவும் சரஸ்வதியும் புதிதாக வெளியான ஒரு நாவலைப் படிக்கும் சுவாரஸ்யத்தில் இருந்தனர். மகாவிஷ்ணு, லட்சுமியோடு கண்ணாமூச்சி யாடுவதாகப் பொய் சொல்லி அவள் கண்ணைக் கட்டி அலைய விட்டுவிட்டு.....ஊர்வசியும் அவரும் ஒரு அருவியின் பக்கம் போய் உல்லாசத்தில் ஈடுபட்டிருந்தனர். மயிலுக்கும் சேவலுக்கும் சண்டை மூட்டிவிட்டு, வள்ளி தெய்வயானை சமேதராய் முருகன் மகிழ்ச்சியில் திளைத்திருந்தார். விநாயகர், துதிக்கையில் நீரை யுறிஞ்சி அதைத் தேவமாதர்கள் மேலிறைத்து வேடிக்கை செய்திருந்தார்.

யாரும் தன்னைக் கவனிக்கவில்லையென்றறிந்த பரமசிவன் தாருகாவனத்து ரிஷி பத்தினிகளின் 'ஜாகை'க்கு போய்க் கொண்டிருந்தார்.

சொர்க்க லோகத்தில் இந்த சோலை விருந்து!

இவைகள் எதையுமே கவனிக்காமல் புல்தரையில்ஒரு கூட்டம் அமர்ந்திருந்தது. அந்தக் கூட்டத்தினரின் தோள்பட்டையில் ஒருமஞ்சள் நிறத்துண்டுத் துணி தொங்கிற்று. அதில் நீல வர்ணத்தில் 'குடியேறியவர்' என்று குறிக்கப்பட்டிருந்தது. முகங்களைப் பார்க்கும்போது பூலோகவாசிகள் என்பது நன்றாகத் தெரிந்தது. ஆமாம்...பூலோகவாசிகள் தான்! கண்ணப்ப நாயனார், காரைக்கால் அம்மையார், நந்தனார், சிறுத்தொண்டர்...... இன்னும் எல்லோரும் இருந்தார்கள். அவர்கள் பேச்சு பெரிய விவாதமாக அமையவில்லை ஆளுக்கு ஒரு வார்த்தை பேசினார்கள். அது அவர்கள் சொர்க்க லோகத்திற்கு வந்த விதத்தைப்பற்றி!

**கண்ணப்ப நாயனார்:**-என்னுடைய இரண்டு கண்களையும் குத்திக்கொண்ட பிறகுதான் கடவுளின் கருணை கிடைத்தது.

**சிறுத்தொண்டர்**.-என் குழந்தையைத் துண்டுபோட்டுக் கறி சமைத்து அதன் தலையை நானும் என் மனைவியுமே இடித்துத் துவையல் அறைத்து அன்னமிட்டேன், அதற்குப் பிறகுதான் சிவபெருமான் சித்தமிரங்கி என்னை யாட்கொண்டார்.

**நந்தனார்**:- அக்கினியிலே முழுகி தீட்டையெல்லாம் பொசுக்கிக் கொன்றுவிட்டு பொன் மேனியோடு வா என்று தீக்ஷதர்கள் கனவிலே தீனதயாபரன் சொல்லிவிட்டார். அந்த தியாகத்தை நான் செய்த பிறகுதான் தில்லையப்பனின் திருப்பாத தரிசனம் கிடைத்தது.

**காரைக்கால் அம்மையார்**:- உடலிலே உள்ள சதைகளையெல்லாம் கழித்தெறிந்து விட்டு, ரத்தத்தை வடித்துவிட்டு எலும்பு உருவமாக—பேய் மாதிரி—தலை கீழாக நடந்து வாச்சொன்னார் பீடுடைய பெம்மான்! அந்தக் கஷ்டத்திற்கு ஆளான பிறகு தான் கைலாசபதி கடாக்ஷம் பாலித்தார்.

**அப்பர்**:-ஆலயங்களில் புல் செதுக்கினேன், அந்தணராம் திருஞானசம்பந்தரின் பல்லக்கு தூக்கினேன் அதையெல்லாம் செய்த பிறகுதான் அமரர் உலகம் வர அனுமதி கிடைத்தது எனக்கு!

**இயற்பகை நாயனார்**:-மனிதனுக்கு மானம் பெரிது. அந்த மானத்தை அடகு வைத்து என் மனைவியைப் பரமசிவனோடு பள்ளியறைக்கு அனுப்பிவைத்தேன். அந்த தியாகத்தின் பரிசாகத்தான் இந்தப் பரமண்டல வாசத்தைப் பரமன் எனக்கு அளித்தார்.

**மூர்த்திநாயனார்**:-என் முழங்கையை சந்தனக் கட்டைக்குப் பதிலாகத் தேய்த்து பகவத் பூசை பண்ணினேன். அதன் பலன்தான் எனக்கு சொர்க்க லோகம்.

**எறிபத்த நாயனார்**:-அப்பப்பா! இந்த லோகத்திற்கு வர எத்தனை பேரைக் கொலை செய்திருக்கிறேன் தெரியுமா? சிவனை தூஷித்தவர்களை யெல்லாம் மழுவால் வதைத்துக் கொன்று போட்டேன். அந்தப் பிணங்களையெல்லாம் பிறைசூடும் பித்தரிடம் காட்டிய பிறகுதான் இந்தப் பேறு கிட்டியது.

**கோட்புலி நாயனார்**:- சிவனுக்காக சேமித்து வைத்திருந்த நெல்லைப் பஞ்சகாலத்தில் சாப்பிட்டார்கள் என்பதற்காக...பக்தியின் காரணமாக என் தாய், தந்தை, என் ஆசை மனைவி...... நெல்லைத்தின்ற தாயின் பாலைக் குடித்திருக்கும் என்பதற்காக—என் அன்புக்குழந்தை ஆகியோரைக் கொடுவாளால்வீசிக் கொலை புரிந்தேன். அதன் பிறகுதான் என் குற்றத்தை மன்னித்து கொன்றையணி செஞ்சடையா காட்சி அளித்தார்.

இப்படி பக்தர்கள் தங்கள் தியாகங்களைக் கூறி பெருமிதங் கொண்டனர். பெருமூச்சு விட்டனர்.

உங்களுக்கும் 'ஆகஸ்ட் தியாகிகளுக்கும் வித்தியாசமில்லையப்பா' என்ற திடீர் குரல்கேட்டு, பேசவாயெடுத்தகண்ணப்பர் நிறுத்திவிட்டார். எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். ஒரு வாலிபம் மறைந்த மங்கையின் தோளில் கைபோட்டபடி ஒரு பூணூல்கார அய்யர் நின்றார். எல்லா பக்த சிரோன்மணிகளும் அவர் வாயைப் பார்த்தபடி இருந்தனர். அந்த அய்யர் பேசினார்.

"நீங்கள் எல்லாம் மோட்சலோகம் வர பெரிய பெரிய தியாகம் செய்ததாக பெருமையடித்துக் கொள்கிறீர்களே; அதை நினைத்தால் எனக்கு சிரிப்பு வருகிறது.

தந்திக் கம்பிகளையும் தபாலா பீசுகளையும் தகனம் செய்க

சொர்க்கலோகம் வர சொல்ல முடியாத தொல்லைகள் அனுபவித்ததாகச் சொல்லுகிறீர்களே; இதோ பாருங்கள் நான் எந்த வித சிரமமுமின்றி சிவலோகம் வந்திருக்கிறேன்.

(பக்தர்கள் ஆச்சரியத்தால் திகைத்து விட்டார்கள்)"ஆச்சரியப் படாதீர்கள் அன்பர்களே! இதோ என்மேல் சாய்ந்து கொண்டிருப்பது என் தாய்! (கோட்புலிநாயனார் குறுக்கிட்டு) "உமது தாயாரா?"

"ஆமாம், என் தாய்! என்னைப் பத்துமாதம் சுமந்துபெற்ற தாய். அழகு தொட்டிலில் இட்டு ஆராரோ பாடிய தாய்! இந்தத் தாயாரை நான் என் தாரமாகக் கொண்டிருக்கிறேன். இங்குமட்டு

(7-ம் பக்கம் பார்க்க)

# இக்குறை தீர்ப்பார்?

பழைய ஞாபகச் சின்னமல்ல! திருவாரூர் பள்ளி மாணவர் உணவு விடுதி. உயர்நிலைப் பள்ளியில் பயிலும், வசதியற்ற மாணவர்களின் நலத்திற்காக அமைக்கப்பட்டுள்ள இந்த விடுதி உயர்திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார் அவர்களால் விசயபுரத்தில் நடத்தப்படுகிறது. "சிறந்த செல்வர், எம். ஏ. பட்டம் பெற்றவர், ஆசியா மாநாடு வரையிலே அரசியல் தொடர்பு கொண்டவர். பொதுநலப் பணியிலே ஈடுபட்டிருப்பவர். அவரால் நடத்தப்படும் விடுதியா இப்படி சீரழிந்து கிடக்கிறது?" எனக் கேட்கத் தோன்றும்; வேண்டுமென்று விடப்பட்டதல்ல... சீரழிவுக்கு காரணம்!;.. கவனிக்காத குறை யென்பதுதான் சரியான பதிலாகும்.

இந்தப் புகைப்படம் வேடிக்கைக்காக — விஷம புத்தியோடு வெளியிடப்படுவதல்ல. வெளியில் கூற முடியாமல் தவிக்கும் மாணவர் வேதனையை வேண்டுகோளாக மாற்றி வி.எஸ்.டி. அவர்களிடம் தருவதுதான் இப் படப்பிடிப்பின் கருத்தாகும்.

படத்திலே...சரிந்து விழுந்த கற்கள், ஓட்டை விழுந்த சுவர்கள்தான் தெரியும். மாணவர்களைப் படிக்கவிடாமல் வீசுகின்ற துர்நாற்றம்—மூச்சுவிட முடியாமல் வியாபித்திருக்கின்ற விஷத் தூசிகள்—குடும்பங்களோடு வாழும் எலிக்கூட்டங்கள்—உட்கார முடியாமல் உப்பளர் அடித்துப்போன தரை—சுண்ணாம்பு காணாத சுவர்கள்—தெருப் பிச்சைக்காரர்கள் சாப்பிட்டு சிதறிக் கிடக்கும் சோற்றுப் பருக்கைகள்—அண்டவரும் ஆடு மாடுகள் செய்யும் அசுத்தங்கள் இவை யெல்லாம் படத்தில் காணப்படவில்லை. ஆனால் விடுதியிலே காணலாம்.



இந்தக்குறை நீக்கப்படவேண்டாமா? என்பதுதான் கேள்வி.

வி. எஸ். டி. அவர்கள் சுயநலத்தை மட்டும் பெரிதாகக் கருதி சோபிதவாழ்வு நடத்தாமல்...... நாட்டு மக்களின் சுக துக்கங்களிலும் பங்குகொண்டு பொதுப் பணியாற்ற முன் வந்துள்ளவரானபடியால் **இக்குறை தீர்ப்பார்** என நம்புகிறோம். ஆகவேதான் ஒரே இனத்தவர் என்ற உரிமையோடு கூறுகிறோம். வருங்கால திராவிடத் தனியரசு அமைக்கும் தொண்டில் அவரும் பங்கு பெறுவார் என்ற உறுதி நமக்கிருக்கிறபடியால் வேண்டுகிறோம்,

ஒரு சில செல்வர்களைப்போல உலகந் தெரியாதவராக வி. எஸ். டி. அவர்கள் இருந்தால் நாம் கவலைப்படப் போவதில்லை, எதையும் சாதிக்கக் கூடிய வாலிபப் பருவமும்—ஈரமுள்ள நெஞ்சமும்—படிப்பினால் பெற்றுள்ள

(6-ம் பக்கம் பார்க்க)

# முரசொலி

திருவாரூர்.

பெரியார் ஆண்டு 69. மாசி 13
புதன் 25—2—48.


## "பெரியார் யோசனைக்கு வடநாட்டுத் தலைவர்கள் சம்மதம்"

"நீ எந்த நாடு?"

"நான் காந்திஸ்தான்"

கேட்டவன் பிரஞ்சுக்காரன்.

அவனுக்கு கிடைத்த பதிலில் ஒரு சரித்திர நிகழ்ச்சி அடங்கி இருக்கிறது என்பதைக் கேட்டவனும், பதில்கூறியவனும் உணர்கிறார்கள்.

"அடிமை இந்தியாவை மீட்க அல்லும் பகலும் அயராது பாடுபட்ட காந்தியார்... அவர் கண்ட வெற்றி... அஹிம்சைக்காக அவர் தன்னையே பலியிட்டுக் கொண்ட தியாக உணர்ச்சி" இத்தனையும் காந்திஸ்தான் என்ற வார்த்தையில் எதிரொலிக்கும். இது காந்தியாருக்காகக் கட்டப்படும் அழியாத ஞாபகச்சின்னமாகவும் இருக்கும்: இந்த ஞாபகச் சின்னத்தின் கல்நாட்டுவிழாவை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நடத்தியிருக்கிறார்.

கல்நாட்டுவிழா செய்யப்பட்டு கட்டிட வேலை துவக்கப்படாமலிருக்கும் நிலையைப் போலவே பெரியாரின் யோசனையும்கவனிக்கப்படாமலிருக்கிறது.

"இந்தியாவுக்குஇந்துஸ்தான் என்ற பெயருக்குப் பதிலாக காந்தி தேசம் அல்லது காந்திஸ்தான் என்று பெயரிடப் படலாம். இந்து மதம் என்பதற்கு பதிலாக காந்தி மதம், காந்தினிசம் என்பதாக மாற்றப் படலாம். இந்துக்கள் என்பதற்கு பதிலாக மெய்ஞானிகள் அல்லது சத்ஞானஜன் என்று பெயர்மாற்றப்படலாம்.

காந்தி மதக் கொள்கையாக இந்தியாவில் ஒரே பிரிவு மக்கள் தான் உண்டு வர்ணாஸ்ரம தர்ம முறை அனுசரிக்கப்பட மாட்டாது. அறிவும் அன்பும் அடிப்படையாகக்கொண்டது. சத்து அதாவது சத்தியமே நித்திய மானது என்பதான சன்மார்க்கங்களைக் கொண்டதாகும் என்பதாக ஏற்படுத்தி கிறிஸ்து ஆண்டு என்பதற்குப் பதிலாக காந்திஆண்டு என துவக்கலாம்."

இவை பெரியாரின் கருத்துக்கள். இந்தக்கருத்துக்கள் நாட்டு மக்களிடையே பரவ இயலாமல் பத்திரிகை உலகம் திரைபோட்டு விட்டது. தனக்கு செல்வாக்கு குறைந்துவிடுமோ என்பதற்காக சில நாடகக் கம்பெனிக்காரர்கள் நல்லநடிகர்களின்பெயரைமறைப்பதற்கு முயற்சிப்பார்கள். சாதாரண வேடங்களை அவனுக்கு அளிப்பார்கள் நல்ல வசனங்களை குறைத்து விடுவார்கள். இந்த முறையை ஒட்டி பெரியாரின் ஆலோசனையை ஆரியப் பத்திரிகைகள் கண்ணுக்குத் தெரியாத-கவனிக்க அவசியமில்லாத இடத்தில் போட்டு தங்கள்மேல் குறையில்லாத அளவுக்கு நடந்து கொண்டிருக்கின்றன.

பெரியாரின் ஆலோசனை பத்திரிகைகளுக்கு மட்டும் செல்லவில்லை. பண்டித ஜவஹர், பட்டேல் துரை, ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஆச்சாரியார் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டிருந்தும்... அவர்களும் இதுவரை வாய் திறக்கக்காணோம்.

காந்தியாரின் கொலை சம்மந்தமான சதிகாரர்களைப் பிடிப்பதில் முனைந்திருக்கிறார்கள்...... அது முடிந்த பிறகு பதிலளிப்பார்கள் என நம்பினோம். அந்த வேலை ஒருவாறு முடிந்து... அஸ்தி கரைப்பு சடங்குகளும் நடைபெற்று... காந்தியாருக்கு ஞாபகச்சின்னம் அமைக்கும் பிரச்சினைக்கும் வந்துவிட்டார்களே... இப்பொழுதாவது பெரியாரின் யோசனையைப்பற்றி பதில் தீட்டுவார்கள் எனத் தினசரிகளில் தேடித் தேடிப் பார்த்தோம்; "79 அடியில் எழில் மாடம் அமைக்கப் போகிறார். கோபுரம் அமைத்துக் காந்திக்கோமானின் சிலை வைக்கிறார். கோடிக்கணக்கில் நிதி வசூல். கோயில்களும் சிலைகளும் வேண்டாமென பட்டேல் உபதேசம்." இவைபோன்றசெய்திகள் பத்திரிகைகளில் நிரம்பி வழிகின்றனவே தவிர "பெரியார் யோசனைக்கு வடநாட்டார் பதில்?" என்ற தலைப்பைக் காணமுடியவில்லை.

இந்துஸ்தான் என்ற பெயர் இந்துமத அடிப்படையில் எழுந்துள்ள பெயர்.

பௌத்தமதத்தை ஒரு புத்தர் உண்டாக்கியதுபோல்—கிறிஸ்து மதத்தை ஒரு இயேசுநாதர்உண்டாக்கியதுபோல்—முஸ்லிம் மதத்தை ஒரு முகம்மது நபி உண்டாக்கியதுபோல் இந்துமதத்தையும் ஒருவர் உண்டாக்கினார் என்று சொல்வதற்கில்லை. இந்து மதத்திற்காக இயேசுவைப் போல, புத்தரைப்போல, நபியை போல கொள்கையை நிலைநாட்ட ஒருவர் ரத்தம் சிந்தினார் என்ற

25—2—48 முதல் திருவாரூர் பிரபாத்தில் மதனமாலா 2-வது வாரம்

சரிதமுமில்லை. இந்து மதத்துக் கடவுள்கள், இழிவு ஆபாசம் இவைகளின் இருப்பிடங்கள். இன்பக் கேளிக்கைகளையும் — இதழில் தேன்வழியும் எழிலரசிகளுடன் சரச விளையாட்டுக்களையும் தியாகமாகக்கொண்டவர்கள் இந்து மதக் கடவுள்கள். சாதி மதபேதங்களின் உற்பத்திஸ்தானம் இந்துமதக் கோயில். புத்த மதத்தினருக்கு ஒரு கடவுள்— முஸ்லிம் மதத்தினருக்கு ஒரு கடவுள்-- கிறிஸ்துவ மதத்தினருக்கு ஒருகடவுள்...ஆனால் இந்து மதத்தினருக்கு முப்பத்து முக்கோடி கடவுள்கள்.

இந்த இழிவுகொண்ட மதத்தையே மாற்றி...சமதர்ம கொள்கைகளுக்கு, வர்ணாஸ்ரமம் ஒழிந்த சமுதாய வாழ்வுக்கு **காந்தி மதம்** அல்லது **காந்தீனிசம்** என்று பெயர் மாற்றப்படுவதில் தவறென்ன காணமுடியும்.

தீண்டாமை ஒழிய வேண்டுமென்றார் காந்தியார்.

தீண்டாமையை சிருஷ்டித்த ஆரியப்பூணூலை அணிந்து அய்யர் வேடத்தில் காட்சி தருகிறார் இந்துமதத்து ஆண்டவன். இது காந்தியார் கொள்கைக்கு முரண்பாடல்லவா?

அகிம்சை போற்றுக என்று அறிவுரை வழங்கினார் காந்தியார். ஆட்டுக் குடலை வாயில் கௌவிக்கொண்டு.... ரத்தம் சொட்டும் கையினிலே கொடுவாள் ஏந்தி அகோர தரிசனம் தரும் காளியம்மை இந்து மதத்தினரின் கடவுள். இது காந்தியாரின் அகிம்சைக் கொள்கைக்கு வேறுபட்டதல்லவா?

நல்லொழுக்கம் நாட்டு மக்களுக்குத் தேவை என்றார் காந்தியார்.

தாருகா வனத்து தபோதனர் மனைவிகளின் கற்பை அழித்த பரமசிவன் இந்து மதத்தினரின் கண்கண்ட தெய்வம். சைவத்தை வளர்ப்பதாகக்கூறி சேல்விழி மாதருடன் சயன லீலை நடத்தும் பண்டார சந்நிதிகள் இந்து மதத்தினரின் குருக்கள்.

நல்லொழுக்கம் போதித்த காந்தியார் கருத்துக்கு இச்செயல்கள் பொருந்திவருமா?

காந்தியாரின் தியாக ரத்தத்திலே கட்டப்படும் நினைவுச்சின்னம் காந்திமதம் அல்லது காந்தினிசம்! இந்தப் பெயர் மாற்றம் நாட்டிலே பேத உணர்ச்சிகளைப் பெயர்த்துக் கடலிலே வீசும் என்பதற்காகத்தான் பெரியார் ராமசாமி வடநாட்டுத் தலைவர்களுக்கு ஆலோசனை மடல் வரைந்தார்.

இந்த யோசனை ஒப்புக்கொள்ளப்பட்டால் உலகம் அழியும் வரையில் உத்தமர் காந்தியின் பெயரும் அழியாமலிருக்க வழி செய்யப்படுவதோடு... மக்களையும் மத வெறியிலிருந்து மீட்டு மனிதாபிமானப்பாதையில் நடக்கச்செய்தார்கள் என்ற நல்ல பெயரை இந்த நாட்டு ஆட்சியாளர் பெறலாம்.

இந்துஎன்பதும் இந்தியாஎன்பதும் அந்நியர்கள் வைத்தபெயர் காந்தியாரும் அண்மையில் இதை கூறியிருக்கிறார். இந்து மத வெறியே காந்தியாரைக் கொன்றது என்பதையும் மறக்கமுடியாது. ஆகவே, இந்தப் பெயர் மாற்றம் காந்தியாருக்காக கட்டப்படும் மறையாத நினைவு மாளிகை. இதை விடுத்து சிலைகள் செதுக்குவதும், ஏராளசெலவில் எழுபத்தொன்பது தூண்கள் நிறுத்தி அதில் காந்தியாரின் வாழ்க்கைக் குறிப்புகள் எழுதுவதும் பயனற்றசெயல்களாகவே ஆகும்.

காந்தியாரின் வாழ்க்கைக்குறிப்பை—தியாகச் சிந்தையை.... வேண்டுமானால் 79 பக்கங்களில் அச்சிட்டு வழங்கலாம். காந்தியாரைக் கொன்ற மதவெறி மாய்ந்துபோக வேண்டுமானால்... இன்றைய அளவில் உடனடியாக செய்யவேண்டிய வேலை... பெரியார் ராமசாமியின் ஆலோசனைக் கடிதத்தைப் படித்து ஆவன செய்வதுதான்!

பெரியாரின் யோசனையை அலட்சியம் செய்கிறவர்கள் காந்தியார் மறைவுக்காக நீலிக்கண்ணீர் வடித்தவர்களாகத்தான் மதிக்கப்படுவார்கள்.

மதவெறியை தீர்க்கும்மருந்து பெரியார் தீட்டிய மடல்.

மக்களின் சோபித வாழ்வுக்கு மார்க்கம் வகுப்பது பெரியாரின் யோசனை.

இதற்கு இதுவரை மதிப்புத் தரப்படவில்லை. "காரணம் என்ன?" என்றுகேட்கவேண்டும் காந்தியத்தில் பற்றுகொண்ட திராவிடர்கள்! நேரு, பட்டேல், ஜெயபிரகாஷ், ஆச்சாரியார் ஆகியோருக்கு தேசியத் தோழர்கள் தீர்மானங்கள் அனுப்பவேண்டும்.

"பெரியாரின் யோசனையைப் பற்றி முடிவுதருக" என்ற வேண்டுகோள் விடுக்கவேண்டும்.

செய்வார்களா?......

வருமா;... "பெரியார் யோசனைக்கு வடநாட்டுத் தலைவர்கள் சம்மதம்" என்ற செய்தி?

## பிறப்பு.

**25—2—48 காலை மணி 11-க்கு ஆசிரியர்: மு. கருணாநிதி அவர்கட்கு ஆண்மகவு பிறந்திருக்கிறது தாயும் சேயும் நலம்.**

சுவை மிக்க சிற்றுண்டிகளுக்கு விஜயபுரம் பீம விலாஸ், சிறந்து விளங்குகிறது

# காந்தியாரைக் கொன்றது பார்ப்பனனல்ல?

உலகம் போற்றும் உத்தமர் காந்தியார் முடிவெய்திய பிறகு நான் பேசுகிற முதல் கூட்டம் இதுவே. காந்தியாரை சுட்டது பார்ப்பனன் என்று கூறப்படுகிறது. காந்தியாரை சுட்டது பார்ப்பனனல்ல. காந்தியாரை சுட்டது பார்ப்பனன் என்று கூறப்படுமேயானால்...நான் கூறுகிறேன்; காந்தியாரை சுட்டது துப்பாக்கி என்ற! அந்த துப்பாக்கியின் மேல் சுமத்தப்படுகிற பழிதான் அந்தப் பார்ப்பனன் மேலும் சுமத்தப்பட வேண்டும். மறுபடியும் கூறுகிறேன்; சுட்டது பார்ப்பனனல்ல! சுட்டது சதி நடத்தி அதற்கு ஆதரவு தந்தவர்களுமல்ல! வேறு எது காந்தியாரைக் கொன்றது? மக்களுக்கு ஜாதியின் பேரால் மதத்தின் பேரால், கலையின் பேரால் ஆச்சார அனுஷ்டானங்களின் பேரால் ஏற்பட்டுள்ள கருத்துக்களே காந்தியாரைக் கொன்றது.

இந்தக் கொடுமை, அந்த பார்ப்பனனை தூக்கிலிடுவதாலோ அல்லது அந்த ஜாதியை அழித்து விடுவதாலோ இனியும் நடக்காமலிருக்குமென்று நம்ப முடியாது. அப்படிச் செய்வது தற்கால சாந்தியாகத் தான் முடியும்; வேறு பயன் ஏற்படாது. மலேரியாவுக்கு 'கொய்னா' தருவதால் ஒருவன் நோய் நிற்கும். அந்த மலேரியாவே மனித வர்க்கத்திற்கே வராமலிருக்கவழி செய்ய வேண்டுமானால்....மலேரியாவிற்கு காரணத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். காரணம் கொசுகூட அல்ல! அது உற்பத்தியாகும் சாக்கடை! அந்த சாக்கடை ஒழிக்கப்பட வேண்டும்.

அதைப் போலத்தான் காந்தியாரைக் கொன்ற பார்ப்பனன்—மலேரியாக் காய்ச்சல்; சதி நடத்தியவர்கள்—கொசுக்கள்; சுடுவதற்கு, சதி நடத்துவதற்குக் காரணமாயிருந்த மத, ஜாதி, சமுதாய பேதக் கருத்து-சாக்கடை; இப்பொழுது புரிகிறதா காந்தியாரை சுட்டது எது என்று!

இதை நாகரீகக் காலமென்கிறார்கள். மூர்க்கர்—அயோக்கியர்—சண்டாளர்—பொய்யர்—போக்கிரிகள் உலவும் இந்தக் காட்டுமிராண்டிக் காலத்திற்குப் பெயரா நாகரீகக்காலம்?

காந்தியார் உயிரைக் குடித்தது அறியாமை என்று கூட சொல்ல முடியாதே.

அவரை சுட்டவன் ஒரு பத்திரிகாசிரியன்—உயர்ந்த ஜாதிக்காரன்—எனச் சொல்லப்படுகிறது. சுடுவதற்கு சதி நடத்தியவர்கள் பெரிய பெரிய மேதாவிகள் என செய்தி வந்திருக்கிறது. சதிக்கு உடந்தையெனக் கூறப்படும் இயக்கம் உயர்ந்த தத்துவங்களை உபதேசிப்பதாயும்—தெய்வீக சக்தி பெற்ற கொள்கைகளையுடையதென்றும் விளம்பரப் படுத்தப்பட்டது. இந்த நிலையில் காந்தியாரைக் கொன்றது அறியாமை என்று கூற முடியுமா? மத, சமுதாய—சாதியின் மாறுபட்ட கருத்துக்கள் தான் இந்தக் கொலைக்குக் காரணமாக இருந்திருக்கிறது என்பதை நாம் நிச்சயித்துக் கொள்ளவேண்டும்.

எல்லாக் கட்சியினர், மதத்தினர், அரசாங்கத்தார் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு நல்ல ஏற்பாடு செய்து ஒரு புது உலகத்தை உண்டாக்கினால் தான் இந்தக் கொடுமைகள்—கொலை பாதகங்கள் ஒழியும்.

காந்தியாருக்கு ஞாபகச் சின்னம் அமைப்பது பற்றி நான் கூட அவருடைய நண்பர்கள்—சிஷ்யர்களுக்கு ஒரு ஆலோசனைக் கடிதம் எழுதினேன். அவர்கள் கவனித்ததாக இதுவரை தெரியவில்லை. வேறு வேலையில் ஒரு சமயம் ஈடுபட்டிருப்பார்கள். எப்படியும் ஒரு காலத்தில் இந்த முடிவுக்கு வந்து சேருவார்கள், என்ற நம்பிக்கை மட்டும் உண்டு.

(19—2—48ல் சன்னநல்லூரில் பெரியார் ஈ.வெ.ரா. சொற்பொழிவில் சிந்திய முத்துக்கள்).

---

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

## இக்குறை தீர்ப்பார்?

பண்பும்—வறுமை தெரியாத அளவுக்கு வற்றாத வயற்செல்வமும் அமையப்பெற்றவர் அவர்.

இந்த வேண்டுகோளை அவர் மதித்து மாணவர் நலனுக்காக இடிந்த இந்தக் கட்டிடங்களைத் திருப்பணி செய்வாரேயானால் திருவாரூர் ஆரியன் கோபுர "ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம்" செய்கிற "புண்யத்"தை விட அதிக "புண்யம்" ஏற்படும் என்பதோடு புழுதியடைந்த கட்டிடங்கள் இடம்பெற்ற இந்த "முரசொலி"யில் புதுக்கட்டிடத்தின் புகைப்படமும் எல்லையிலா மகிழ்ச்சியோடு வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்; தாழ்மையோடு! திராவிட இனத்தவர் என்ற உரிமையோடு!

(2-ம் பக்க தொடர்ச்சி)

மல்ல, பூலோகத்திலேயே இந்த அன்னை என் ஆசை நாயகியாக இருந்தாள். இவள் என்னைத் தொட்டிலில் போட்டு ஆட்டினள். நான் இவளுக்குக் கட்டிலில் இன்பமூட்டினேன். மாதாவை மனைவியாக்குவது மகா பாபமல்லவா என்பீர்கள்; இதைவிட மகா மகா பாபமாக, எங்களை மஞ்சத்தில் கண்டுவிட்ட என் தகப்பனுரை உடனே கொன்று போட்டேன். உனக்கா சொர்க்க வாசல் திறந்தது என்று கேட்கிறீர்களா? ஆமாம்; எனக்குத்தான் சொர்க்கம் சுலபத்தில் வழி விட்டது. 'அபகர மகாதேவா' என்றேன்; அம்மையை அணைத்தபடி அப்பன், ரிடபவாகன ரூடராய் அருள்மழை பொழிந்தார். ஆனந்தமாக சொர்க்க பூமிக்கு வந்துவிட்டேன்.''

நாயன்மார்கள் ஸ்தம்பித்து விட்டார்கள். காரைக்காலம்மை "இது உண்மையா?'' என்றார்.

"சந்தேகம் வேறா? ஐயமிருந்தால் திருவிளையாடல் புராணம் மகாபாதகம் தீர்த்த படலத்தைப் பாருங்கள்'' என்றார் அய்யர்.

"பாபியாகிய உமக்கு மாத்திரம் இவ்வளவு சுலபத்தில் சொர்க்கலோக வாழ்வு கிடைக்க காரணம் என்ன?'' என்று கேட்டார் சிறுத்தொண்டர்.

"இதுதான் காரணம்'' என்று தன் பூணூலை உருவிக்காட்டினார் அய்யர். "நான் மட்டுமல்ல; சுந்தரமூர்த்தி நாயனாரை தாசி வீட்டுக்கு பகவானே அழைத்துச் சென்றார்...தாசி வீட்டுத் தாம்பூலத்தோடு கோயிலுக்குள் சுந்தரமூர்த்தியை வரச் செய்தார்......சொர்க்க வாழ்வும் சுந்தரமூர்த்திக்கு சுலபத்திலே அளித்தார். அதற்கு இந்தப் பூணூல்தான் காரணம்'' என்று முடித்து விட்டு அய்யர்—அம்மையுடன் சென்றார்.

"அப்படியானால் ஆகஸ்ட் போராட்டத்தை மறுத்த ஆச்சாரியார் தியாகி ஆனதற்கும்....'' என்று கண்ணப்பர் முடிப்பதற்குள்......"ஆமாம் பூணூல்தான் காரணம்'' என்று பதில் கூறினார் எறிபத்த நாயனார்.

"நாமெல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டு...எவ்வளவு மகத்தான தியாகங்கள் செய்து இந்த மகேஸ்வரன் திருவடியை அடைந்தோம்.....மகாபாதகம் செய்த இந்த பிராமணன் ஒரு பூணூல் உதவியால் கைலாசம் வந்துவிட்டானே'' என்று சோகமூச்சு விட்டார் மூர்த்திநாயனார்.

நாமெல்லாம் திராவிடர், அவர் "ஆரியர்.....சொர்க்க லோகம் போவதில் கூட ஆரிய திராவிட வேறுபாடு வேரூன்றி விட்டதப்பா'' என்று இரண்டு துளி கண்ணீர் விட்டார் அப்பர்.

இங்கிலை மாறத்தான் "இனமுழக்கம்'' நடைபெறுகிறது என உரத்துக் கூறியபடி எழுந்தேன் நான். "என்னடா தம்பி........ சொப்பனங் கண்டாயா?'' எனக் கேட்டபடி என் தாயார் என் தூக்கத்தைத் தெளிவித்தார்கள்.

என் தூக்கம் கலைந்தது. காமராஜர்—கிராமணியார்— தூக்கம் கலையவேண்டுமே?

★ ★ ★

# எண்ணம் வாழ்க!

சினவேங்கைத் தமிழ்க்கூட்டம் செயலிழந்து
சிறுமுயலாய்க் கிடக்குநிலை தீர வேண்டும்
இனவேகம், தன்மதிப்பு இன்றி எங்கும்
எள்ளளவும் முன்னேற்றம் மலர்ந்த தில்லை!

இக்குறையைத் தனதாக்கித் தன் நூலான
எழிற்றெண்டை தாய்நாட்டின விடுதலைக்கு
மிக்கஒரு உணர்வினிலே ஊட்டி வைத்து
"மேவிடுக செம்மையெலாம்!' என்றே கூறி

என்தோழர் உயர்எண்ணம், வாய்ந்த நல்லார்
இமைப்போதும் அயராதார் எழுத்தின் வேந்தர்
பொன்விளையும் கைநீட்டி "முரசொலி"யாய்
புதுஏடு தருகின்றார்! எண்ணம் வாழ்க!

—மாவெண்கோ

# பேனா வீரரே!

[ கருணா ]

“படியாத கூட்டத்தார் நிறைந்த கட்சி,
பாமரநம் பாட்டாளிக் குழுவுந் தானே!
முடியாத காரியத்தை மேற்கொண் டென்றும்
மூச்சுவிடத் தயங்குகிறார்;” என்று நம்மைக்
கடியாத மனிதரில்லை ஒருகா லத்தில்
காற்றுடி போற்சுழன்று காலம் மாறி,
‘முடியாத செயலில்லை நம்மால்!’ என்று”
முழங்குகிறார் திராவிடர்கள் முரசு கொட்டி!

புதிதாகத் தமிழகத்தின் மூலை தோறும்
போந்துள்ள பத்திரிகை புற்றீசல்போல்
எதுவாக இருந்தாலும், பார்ப்ப வர்கள்,
“இதுகருப்புச் சட்டையினர் மடலா?”வென்று
மெதுவாக வினவுகின்ற அளவுக் கின்று
விரைந்துள்ள நிலைகண்டு மகிழ்ச்சி மிக்கேன்!
அதுபோக ஒருவார்த்தை அன்பன் சொல்வேன்
ஆய்ந்திதற்கோர் நன்முடிவு காணல் வேண்டும்:

மாணிடரின் அன்றாட வாழ்க்கை முற்றும்
மல்கியுள மனவுணர்ச்சிக் கெல்லை யில்லை.
ஊனுடலை ஒன்றுக்கும் காதலுக்கே
உயரிடத்தை எழுத்தாளர் ஒதுக்கு கின்றார்!
தேனிகர்பெண், தென்றலுறும் சோலை, மாலை,
திங்களுடன் விண்மீன்கள் திகழும் கங்குல்
ஏனிவைதான் கட்டுரையில் கதையில் பாட்டில்
இடம்பெறுதல் வழக்கமாக இருக்க வேண்டும்?

பட்டினியால் துடிதுடிக்கும் உழவன் நெஞ்சில்
பரிதவிப்பு, பயம், சோகம், வறுமை, வாட்டம்,
கட்டுதற்குத் துணியில்லாத் துன்பம் சற்றும்
கால்வைக்க நிலமில்லாக் கொடுமை மேலும்
தொட்டுவிட்டால் தீட்டாகும் கடவுள்-மக்கள்,
சுதந்தரத்தின் பேராலே பகலிற் கொள்ளை,
கொட்டுகின்ற மழை இடியின் குமுறல், மின்னல்,
கோடைவெயில், வாடையுடன் ஆடிக்காற்று.

இவைபோன்ற நிகழ்ச்சிகளை-உணர்ச்சிப் பாட்டை
எடுத்துரைக்கும் எழில்மிக்க ஓவி யங்கள்
சுவைதோய்ந்த தமிழ்மொழியில் தீட்டிக் காட்டின்
தூங்குகிற மக்களுக்கும் விழிப் புண்டாகும்!

# துடை நடுங்காதே!

(பாரதிதாசன்)

செப்பும் பழந்தமிழ் நாட்டின் பெயர்தான்
திராவிட நாடண்ணே!
எப்படி ஒப்பினை இவ்விரண் டுந்தனி
என்பதை நீ அண்ணே!

அப்பெரு நாள்கண்ட சேரன் தமிழ் மகன்
அன்னவர் பின்னவர் நாம்!
இப்பொழு தென்மலை யாளம் பிரிப்பதை
ஏற்றுக்கொண் டாய் அண்ணே!

சேரனும் சோழனும் பாண்டிய மன்னனும்
தென் தமிழ் மக்கள் அண்ணே!
பாரினில் அன்னவர் ஆண்டதும் அண்ணே இப்
பச்சைத் திராவிடந்தான்!

தேர்துளு, ஆந்திரம் கேரளம், கன்னடம்
எல்லாம் தமிழண்ணே!
சீர்கொள் திருத்தமிழ் எனும் சொல்லே
திராவிடம் ஆனதண்ணே!

ஆள-வந்தார்கள்தி ராவிட நாட்டை
அமிழ்த்தவந் தாரண்ணே!
ஆளவந்தார்க் கினித் தாளமும் போடுவ
தாகுமோ சொல்லண்ணே!

தோளும்எங் கே? உன்றன் தூய்மையும் எங்கே?
துடைநடுங் காதே காண்!
வேளையண்ணே நல்ல வேளையண்ணே நல்ல
வெற்றி இதோ அண்ணே!

(சிங்கப்பூர்- திராவிட முரசு.)

‘எவை மாய்ந்தால் நல்வாழ்வு நமக்காம்’ என்ற
எண்ணத்தை நிச்சயமாய்ப்பெறுவார் மக்கள்!
நவைதீர்ந்த திராவிடத்தை நாட்டற் கன்றி,
நாமெதற்கு வாழ்கின்றோம் பேனா வீரர்?

முகப்பு படம்
மூவலூர், மூதாட்டி ராமாமிர்தத்தம்மாள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: மு. கருணாநிதி, திருவாரூர்.
அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால் கருணாநிதி (மின்னியக்க) அச்சகம், விஜயபுரம்.